## சுதந்திர போராட்டத் தியாகி

# தீரன் சின்னமலை சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை!

## அமைச்சர்கள் - முன்னணியினர் பங்கேற்றனர்!

**சென்னை, ஆக. 4 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திராவிட மாடல் அரசு தியாகிகளைப் போற்றிவரும் மரபில் தீரன் சின்னமலை நினைவு நாளில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்!**

கொங்கு மக்கள் தந்த வரிப்பணம் மைசூர் நாட்டிற்கு ஏன் செல்ல வேண்டுமெனத் தடுத்துப் பணத்தைப் பறித்து ஏழை எளியோர்க்கு வழங்கிய வீரன் தீரன் சின்னமலை! அவனை அழிக்க முயன்ற ஆங்கிலேயரை 1801இல் காவிரிக் கரையிலும், 1802இல் ஓடா நிலையிலும், 1804இல் அரச்சலூரிலும் ஆக மூன்று இடங்களில் எதிர்த்து வென்றார் வீரன் தீரன் சின்னமலை!

போரிட்டு வெல்ல முடியாத அந்த மாவீரனைச் சூழ்ச்சியால் கைது செய்த ஆங்கிலேயர் ஆடிப்பெருக்கு நாளில் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிட்டனர். அந்த மாவீரன் தீரன் சின்னமலை நினைவு நாள் ஆடிப் பதினெட்டாம் நாள்! அந்த மாவீரன் தியாகம் போற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 4.10.1998 அன்று சென்னை கிண்டியில் திறந்து வைத்த தீரன் சின்ன மலையின் கம்பீரச் சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் பெருமக்கள் சூழ மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தீரன் சின்னமலையின் வீரம் சொல்லும் கொங்கு மண்டலம் போல தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியும் தமிழனின் பெருமை சொல்லும் தியாக பூமியாகும்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தீரன் சின்னமலையைப் போல தமிழ்நாட்டின் மானம் காத்த மாவீரர்கள் வீரபாண்டிய கட்டபொம்மன், மருது பாண்டியர்கள், வீரன் சுந்தரலிங்கம், பூலித்தேவன், வீரமங்கை வேலு நாச்சியார், வீரத்தாய் குயிலி, அருந்ததியர் குலப் பகடை ஒண்டிவீரன், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி, மகாகவி பாரதியார், சுப்பிரமணிய சிவா, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், இரட்டை மலை சீனிவாசன், அண்ணல் அம்பேத்கர், தியாகி செண்பக ராமன், வீரத் தியாகி விசுவநாததாஸ், பெருந்தலைவர் காமராசர், கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முதலான தியாகச் செம்மல்கள் அனை வருக்கும் நினைவுச் சின்னங்களை எழுப்பி தியாகச் செம்மல்களின் வரலாற்றை உரக்கச் சொல்கிறது தமிழ்நாடு.

இந்திய திருநாட்டில் வேறு எந்த மாநிலங்களையும் விட தமிழ்நாட்டிற்குப் பல பெருமைகள் உண்டு. உலக மாந்தர்களை உறவாகக் கொள்ளும் அருமைத் தமிழ்ப் பண்பாட்டின் திருமொழியாகத் திகழும், **“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** எனும் சங்க இலக்கியத் தேன்துளி ஐ.நா. அவை முன் ஒளி வீசிப் புகழ் பரப்புகிறது. **“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்”** எனும் அய்யன் திருவள்ளுவரின் சமத்துவச் சிந்தனை உலகம் முழுவதும் பரவியுள்ளது. நமக்கு நன்மை வருவதற்கும் கேடு வருவதற்கும் நாமே காரணம்: வேறு எவராலும் எதனாலும் வராது என்பதை முழங்கும் **“தீதும் நன்றும் பிறர்தர வாரா”** என்னும் தத்துவங்களைப் போல ஜனநாயக ஆட்சி முறையைத் தமிழ்நாடு மிகச் சிறப்பாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்தியது என்பதை தமிழ்நாட்டில் கிடைக்கக் கூடிய உத்திரமேரூர் கல்வெட்டு குடவோலை முறை எனப் பறைசாற்றுகிறது.

நாடு சுதந்திரம் அடைந்தபின் வகுக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம் மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு நாடு என இந்தியாவை அறிமுகப்படுத்துகிறது. அந்த ஜனநாயக ஆட்சி முறை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் நிலவியது என்பதையே குடவோலை முறை என இன்றைய காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் கிடைத்துள்ள கல்வெட்டு பறைசாற்றுகிறது.

**திராவிடக் கட்டடக் கலையின் மாபெரும் கலைச்சின்னம் தஞ்சைப் பெரிய கோவில்**

மாமன்னன் இராஜராஜசோழன் தஞ்சை மாநகரில் கட்டிய பெரிய கோயில் 1000 ஆண்டுகள் கடந்தும் அழியாத மாபெரும் கலைச்சின்னமாகத் திகழ்கிறது. இந்தியாவில் மட்டுமல்ல; உலகின் எந்த ஒரு மூலையிலும் ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டு, சிறிதும் சிதையாமல் இன்றும் நிலைத்து நிற்கும் தஞ்சைப் பெரிய கோயில் போல் ஒரு கட்டுமானத்தை - ஓர் நினைவுச் சின்னத்தை எங்கும் காணமுடியாது.

திராவிடக் கட்டடக் கலையின் பெருமைகளைப் பறைசாற்றும் தஞ்சைப் பெரிய கோயிலின் பெருமையைப் போற்றும் வகையில் மாமன்னன் இராஜராஜ சோழன் பிறந்த சதய நாளை விழாவாகக் கொண்டாடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 13.4.1972 அன்று தஞ்சையில் மாமன்னன் இராஜராஜனின் சிலையையும் நிறுவிச் சிறப்பித்தார்கள். அதுமட்டு மல்லாமல், தஞ்சைப் பெரிய கோயில் கட்டி முடிக்கப்பட்ட ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவை ஐந்து நாள் கலை விழாவாக 2010 செப்டம்பர் திங்களில் கொண்டாடியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்!

**மாமன்னன் இராஜேந்திர சோழனின் ஆடி திருவாதிரை விழா!**

மாமன்னன் இராஜராஜன் போல் ஒரு மிகச்சிறந்தமாமன்னனாகவிளங்கியவன் அவன் மகன் இராஜேந்திர சோழன். தந்தை இராஜராஜ சோழன் கப்பல் படையை நிறுவி ஈழம், முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் என்று அழைக்கப்பட்ட மாலத்தீவு முதலியப் பகுதிகளை வென்ற மாவீரன்.

தந்தை இராஜராஜசோழன் வழியில் அவன் வீர மகன் இராஜேந்திரசோழனும் பல நாடுகளை வென்ற ஒரு மாவீரன். அவன் கப்பற்படையைப் பயன்படுத்தி கடல் கடந்து சென்று மலேசிய நாட்டையும் வென்றான். அதனை, கடாரம் கொண்டான் என வரலாறு புகழ்கிறது.

அத்துடன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றவன் இராஜேந்திர சோழன் என்பதால் அவன் கங்கை கொண்ட சோழன் என்றும் போற்றப்படுகிறான்.

**கங்கை கொண்ட சோழபுரம் திருக்கோயிலும் சோழகங்கம் ஏரியும்!**

மாவீரன் இராஜேந்திர சோழன் பெற்ற வெற்றியின் சின்னமாக கங்கை கொண்ட சோழபுரம் என்னும் புதிய நகரை உருவாக்கி, இராஜராஜ சோழன் தஞ்சையில் கட்டிய பெரிய கோவிலைப் போல் அங்கு ஒரு பெரிய கோவிலையும் கட்டினான். வட இந்தியாவில் உள்ள கங்கையிலிருந்து நீர் கொண்டு வந்து கங்கை கொண்ட சோழபுரத்தில் தெளித்தான் எனக் கல்வெட்டு கூறுகிறது. அங்கு அவர் உருவாக்கிய ஏரி “சோழகங்கம்” எனக் கல்வெட்டுகளில் புகழப்படுகிறது. அப்பகுதி வேளாண் தொழில் செழிக்க இன்றும் உதவுவதால் அந்தச் சோழகங்கம் ஏரி “பொன்னேரி” என்று இன்று அழைக்கப்படுகிறது. அந்த கங்கை கொண்ட சோழபுரம் பெரிய கோயிலை நிர்மாணித்த மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த ஆடித் திருவாதிரை நாள் திருவிழா திராவிடநாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் மிகச் சிறப்பாக அண்மையில் கொண்டாடப்பட்டது.

**கடல் நடுவே கண்ணாடி இழைப் பாலம் கட்டிய திராவிட நாயகர்!**

தமிழ்ச் சமுதாயத்தின் பெருமையை உலகிற்கு உரைப்பது திருக்குறள்! அதனைப் படைத்த அய்யன் திருவள்ளுவருக்கு குமரிமுனையில் 133 அடி உயரம் உள்ள மாபெரும் சிலை, அய்யன் திருவள்ளுவரின் பெருமை போற்றும் வள்ளுவர் கோட்டம் என எல்லாவற்றையும் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் குமரி முனை அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழாவை 2024 டிசம்பர் 30 மற்றும் 31 ஆகிய இரண்டு நாட்கள் கலை விழாவாக எழுச்சியுடன் கொண்டாடினார்கள். அத்துடன் அய்யன் திருவள்ளு வர் சிலையையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் ரூ.37 கோடி செலவில் இந்தியாவிலேயே முதன்முதல் கண்ணாடி இழைப் பாலத்தைக் கட்டி, குமரிமுனையை உலகத் தரத்தில் ஒரு மிகப் பெரிய சுற்றுலா மையமாக மேம்படுத்தினார்கள்.

**தியாகிகளைப் போற்றி வரும் திராவிட நாயகர்**

முதலமைச்சர் அவர்கள் மாமன்னன் இராஜேந்திர சோழனுடைய பிறந்த நாள் கங்கை கொண்ட சோழபுரத்தில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்: அப்பகுதி மேம்பாட்டிற்காக அருங்காட்சியகம் ஒன்றும் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதேபோன்று கலைப் பண்பாடு மற்றும் அருங்காட்சியகங்கள் சார்பில் தஞ்சையில் சோழ அருங்காட்சியகம் ஏறத்தாழ ரூ.55 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படுவதுடன் அங்கு மாமன்னன் இராஜராஜ சோழனுக்கு 35 அடி உயரத்தில் பிரமாண்ட சிலை அமைக்கப்படும் என்றும் ஏற்கனவே அறிவித்துள்ளார்கள்.

அந்த அறிவிப்பின்படி மாமன்னன் இராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடிய முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் உழைத்த மாணிக்கத் தியாகிகளைப் போற்றுவதில் எப்பொழுதும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற 2021க்கு பிறகு 63 சிலைகள், 11 மணி மண்டபங்கள் அரங்கங்கள் அமைத்துள்ளதுடன் மேலும், 28 சிலைகளும் 12 அரங்கங்களும் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு தியாகிகளை போற்றுவதில் இந்திய நாட்டிற்கே வழி காட்டி வருகிறார்கள் !

அந்த வகையில் தான் விடுதலைப் போர்த் தியாகிகள் வரிசையில் தீரன் சின்னமலை தியாகத்தைப் போற்றி அவரது நினைவு நாளில் அவருடைய சிலைக்கு மரியாதை செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2025) சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை மாநில தலைவர் ஆர். தேவராஜ், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி மாவட்டச் செயலாளர் பாலசுப்பிரமணியன், கொங்கு நண்பர்கள் சங்க தலைவர் செல்வகுமார் மற்றும் நிருவாகிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மருத்துவர் இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

---

### தன்மான உணர்வை இம்மண்ணில் விதைத்துச் சென்ற

## வீரப் பெருஞ்சுடர் தீரன் சின்னமலை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக. 4 -**

**தன்மான உணர்வை இம் மண்ணில் விதைத்துச் சென்ற வீரப் பெருஞ்சுடர் தீரன் சின்னமலை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - பதிவிட்டுள்ளார்.**

சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பதைவிட எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம் என ஆங்கிலேயரின் ஆதிக்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய ஓடாநிலைக் கோட்டையின் ஒப்பற்ற விடுதலைப் போராளி தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள்!

சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் இடையே தோன்றி, நம் உரிமைகளில் எவர் கை வைத்தாலும் வெகுண்டெழுவோம் என்ற தன்மான உணர்வை இம்மண்ணில் விதைத்துச் சென்ற வீரப்பெருஞ்சுடரான தீரன் சின்னமலை அவர்களின் புகழ் ஓங்குக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (3.8.2025) “செயலில் சிட்டு சைதை கிட்டு” என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட சைதை கா.கிட்டு அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அன்னாரின் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், ஆர்.கிருஷ்ணகுமார், சை.மு.சேகர், தா. மோகன்குமார் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை (02.08.2025) தொடங்கி வைத்ததை தொடர்ந்து சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் .ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் .டி.எம்.செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் .எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் .இரா.அருள், துணை மேயர் திருமதி.மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.